# 5

# வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

*இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலினால் 2020இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு இடையூறுக்குள்ளானது. எவ்வாறாயினும், அத்தியாவசியமற்ற வணிகப்பொருள் இறக்குமதிகள் மற்றும் சில வெளிநோக்கிய மூலதனப் பாய்ச்சல்களைக் கட்டுப்படுத்துவதில் மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட உரிய நேரத்திலான கொள்கை வழிமுறைகளும் அதேபோன்று குறைவான பெற்றோலிய இறக்குமதிச் செலவினம் மற்றும் அண்மிய மாதங்களில் தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட படிப்படியான அதிகரிப்பு என்பன வெளிநாட்டுத்துறை மீதான அழுத்தத்தினைக் கட்டுப்படுத்துவதில் பாரியளவு உதவின. பலவீனமடைந்த உலகளாவிய கேள்வி மற்றும் 2020 மாச்சு - மே மாத காலப்பகுதியில் முடக்குதல் காலத்தில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய ஏற்பாட்டுப் பணி ஒழுங்குகளுக்கான இடையூறுகளினால் வீழ்ச்சியடைந்த வணிகப்பொருள் ஏற்றுமதிகள் அதன்பின்னர் உலகளாவிய நோய்த்தொற்று மட்டங்களுக்கு முன்னிருந்த மட்டங்களுக்கு உறுதியாக மீட்சியடைந்தன. அநேகமான அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் அத்துடன் குறைவான உலகளாவிய எரிபொருள் விலைகள் என்பவற்றின் மூலம் வணிகப்பொருள் இறக்குமதிகள் கணிசமானளவில் சுருக்கமடைந்தன. உலகளவில் எதிர்நோக்கியதனைப் போன்று 2020 மாச்சு பிற்பகுதியிலிருந்து பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு மூடப்பட்டது. 2020இன் இரண்டாம் காலாண்டில் வீழ்ச்சியடைந்திருந்த தொழிலாளர் பணவனுப்பல்களும் 2020 யூன் தொடக்கம் மீட்சியடைந்து ஆண்டிற்கு ஆண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. நிதியியல் கணக்கில், உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட உலகளாவிய நிதிச் சந்தைகளின் குழப்பநிலையின் காரணமாக அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலும் வெளிப்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்டன. உலகளாவிய நிச்சயமின்மைகள் உயர்வடைந்தமையினால் ஆண்டின் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் மட்டுப்பட்டிருந்தன. உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட முடக்கத்தினை உடனடுத்து செலாவணி வீதம் குறிப்பிடத்தக்க அழுத்தத்திற்குட்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலை மட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட துரிதமான வழிமுறைகள் அதன்பின்னர் குறுகிய காலப்பகுதியினுள் இலங்கை ரூபா மீட்சியடைவதற்கும் நிலைபெறுவதற்கும் உதவின. இதன் விளைவான, உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையில் ஏற்பட்ட மேம்பாடு, தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியினை உள்ளீர்ப்பதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தது. உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட புதுமையான சிக்கல்கள் மற்றும் சவால்களுடன் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமைக்கு மத்தியில் இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் நாட்டின் வெளிநாட்டு நாணயப் படுகடனை உரிய நேரத்தில் தொடர்ந்தும் திருப்பிச் செலுத்தின. வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வழிமுறைகளுடன் எதிர்வரும் காலங்களில் முதலீட்டாளர் நம்பிக்கை மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை குறுகிய காலம் தொடக்கம் நடுத்தரகாலம் வரையில் மேலதிக வெளிநாட்டு நிதியிடல் கிடைக்கப்பெறுதலை உறுதி செய்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.*


### வணிகப்பொருள் வர்த்தகம் மற்றும் வர்த்தக நிலுவை

- **வர்த்தகப் பற்றாக்குறையானது 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாதங்களின் போது ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் மேல் சுருக்கமடைந்தது.** ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும் 2019இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் சுருக்கமடைந்தன. ஆயினும் ஏற்றுமதிகளின் சுருக்கத்தினை இறக்குமதிகளின் சுருக்கும் விஞ்சிச் சென்றமை வர்த்தகப் பற்றாக்குறை வீழ்ச்சிக்கு ஏதுவாக அமைந்தது. குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கான இறக்குமதிகள் மீதான செலவினத்தின் வீழ்ச்சி ஐ.அ.டொலர் 2,628 ஆகவிருந்த அதேவேளை, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சி ஐ.அ.டொலர் 1,585 மில்லியன் ஆகவிருந்தது. அதற்கமைய வர்த்தகப் பற்றாக்குறையானது 2019இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 4,855 மில்லியனிலிருந்து மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,812 மில்லியனுக்கு சுருக்கமடைந்தது.

5


- **வணிகப்பொருட்கள் ஏற்றுமதி வருவாய்கள் 2020 ஏப்பிறலில் அவதானிக்கப்பட்ட விரைவான வீழ்ச்சியிலிருந்து உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்திய மட்டங்களுக்கு மீட்சியடைந்தன.** 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான திரண்ட வருவாய்கள் 2019இன் தொடர்புடைய காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 8,030 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 6,445 மில்லியனுக்கு 19.7 சதவீத

வரைபடம் 5.1
வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம்




*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.2
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் (சன-ஓகத் 2020)




*மூலங்கள்:* இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

குறைவொன்றினைப் பதிவுசெய்தன. இக்குறைவானது முடக்கல் காலப்பகுதியில் பொருட்கள் மற்றும் வர்த்தகம் தொடர்புபட்ட பணிகளின் உள்நாட்டு உற்பத்திக்கான இடையூறுகளிலிருந்தும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக உள்நாட்டு மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலிகளுக்கான தடங்கல்களிலிருந்தும் தோற்றம்பெற்றது. அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளிலிருந்தும் ஏற்றுமதிகளிலான வீழ்ச்சி தோற்றம்பெற்றதாயினும் புடவைகள் மற்றும் ஆடைகள், தேயிலை மற்றும் இறப்பர் தயாரிப்புகள் மூலம் இது முதன்மை வகிக்கப்பட்டிருந்தது. எனினும், இரண்டு துணைத் துறைகள் அதாவது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள் என்பன கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.


- **மொத்த ஏற்றுமதிகளின் ஏறத்தாழ 76 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,905 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 22.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** இவ்வீழ்ச்சிக்கு புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 2,853 மில்லியனுக்கு 23.6 சதவீதத்துடனான வீழ்ச்சியுடன் முக்கியமாக பங்களித்தன. இதற்கு மேலதிகமாக, இறப்பர் தயாரிப்பு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான


வரைபடம் 5.3

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம்

### இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது 2020 மாச்சு மற்றும் ஏப்பிறலில் கணிசமாகப் பாதிக்கப்பட்டது:

- கேள்வி மற்றும் நிரம்பல் சங்கிலிகளிலான இடையூறுகளுடன் விரைவாக வீழ்ச்சியடைந்த ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினங்கள்
- சில புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பலுடன் வீழ்ச்சியடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள்
- ஏப்பிறலிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்
- கணிசமான நிதி வெளிப்பாய்ச்சல்கள்
- செலாவணி வீதத்தின் கடுமையான தளம்பல்








எனினும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மற்றும் வெளிநோக்கிய நிதிப்பாய்ச்சல்களைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகளும் அதேபோன்று குறைவான உலகளாவிய பெற்றோலிய விலைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட படிப்படியான அதிகரிப்பு என்பவை வெளிநாட்டுத் துறையினை உறுதிப்படுத்துவதில் பாரியளவு உதவின...

### வர்த்தகப் பற்றாக்குறை


சன - ஓகத் 2020 : **ஐ.அ.டொ. 3.8 பில்**
(சன - ஓகத் 2019): ஐ.அ.டொலர் 4.9 பில்.

ஏற்றுமதிகள்: ஐ.அ.டொலர் 6.4 பில்.



இறக்குமதிகள்: ஐ.அ.டொலர் 10.3 பில்





வர்த்தகப் பற்றாக்குறை 2019இன் சன-ஓகத் உடன் ஒப்பிடுகையில் 2020 சன-ஓகத்தில் ஐ.அ.டொ. 1 பில்லியனுக்கும் மேல் சுருக்கமடைந்தது...

### பணிகள் கணக்கு மற்றும் இரண்டாந்தர வருமான கணக்கு மிகைகள் குறைக்கப்பட்ட அதே வேளையில் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சுருக்கமடைந்தது...

**பணிகள் கணக்கு (தேறிய)**

கா1 2020: **ஐ.அ.டொ 901 மில்**
(கா1 2019: ஐ.அ.டொ 1,545 மில்)

சுற்றுலாப் பயணிகளின் வருவாய் | போக்குவரத்து | த.தொழில்நுட்பம்/ பீ.பி.ஓ.



| | | | |
|---|---|---|---|
| ஐ.அ.டொ. **1.0** பில் | ஐ.அ.டொ. **0.0** | ஐ.அ.டொ. **0.8** பில் | ஐ.அ.டொ. **0.5** பில் |
| சன - மாச் 2020 | ஏப் - செத் 2020 | சன - யூன் 2020 | சன - யூன் 2020 |

**முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை**

கா1 2020: ஐ.அ.டொ. **1.0** பில்
(கா1 2019: ஐ.அ.டொ. 1.1 பில்)

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**
(ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி)




ஐ.அ.டொ. 1.0 பில்
(சன - செத். 2020)
(2.4% ஆண்டிற்கு ஆண்டு)


**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்**

ஐ.அ.டொ. 6.7 பில்
(செத். இறுதி 2020)


ஐ.அ.டொ. 7.6 பில்
(திசெ. இறுதி 2019)



...சுற்றுலாத் துறையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது




### 2020 முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான மட்டுப்பட்ட உட்பாய்ச்சல்கள்




5

காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 489 மில்லியனுக்கு 17.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இலங்கையின் ஆடைகள் மற்றும் இறப்பர் தயாரிப்புகளுக்கு முக்கிய சந்தைகளாக விளங்குகின்ற ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன கொவிட்-19 உடன் தொடர்புபட்ட இடையூறுகள் மூலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2020 ஏப்பிறலில் புடவைகள் மற்றும் ஆடைகள் அத்துடன் இறப்பர் தயாரிப்பு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் சடுதியான வீழ்ச்சியானது முகக்கவசம் மற்றும் சத்திரசிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் போன்ற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்கான அதிகரித்த கேள்வியுடனும் இந்தியா, வங்களாதேசம் போன்ற கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட பிராந்திய வழங்குநர்களிடமிருந்து ஏற்றுமதி கட்டளைகள் இலங்கைக்கு திருப்பப்பட்டமை மூலமும் அதனைத் தொடர்ந்து பாரியளவில் மீட்சியடைந்தது. கைத்தொழில் தயாரிப்புகளின் ஏனைய அனைத்து துணைத் துறைகளிலிருந்துமான ஏற்றுமதி வருவாய்கள், பிளாத்திக் மற்றும் அதன் பொருட்கள் ஏற்றுமதி தவிர (முக்கியமாக பிளாத்திக் ஆடைப்பொருட்கள்) 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு செய்யப்படுகின்ற காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.



- **மொத்த ஏற்றுமதியின் ஏறத்தாழ 24 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,516 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** எனினும், 2020 மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவான பெறுமதிகளைப் பதிவுசெய்த பின்னர் பகுதியளவில் மீட்சியடைந்தன. இம்மீட்சியானது தேயிலை, தெங்கு, வாசனைத் திரவியங்கள் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள் மூலம் முதன்மை வகிக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக, தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அளவு மற்றும் சராசரி ஏற்றுமதி விலைகள் நியதிகளில் முறையே 11.3 சதவீதம் மற்றும் 0.8 சதவீத வீழ்ச்சியுடன் ஐ.அ.டொலர் 806 மில்லியனுக்கு 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஐக்கிய அமெரிக்கா உள்ளடங்கலாக பிரதான ஏற்றுமதி அடைவிடங்களிலிருந்து கடலுணவுக்கான குறைவடைந்த கேள்வியின் விளைவாக கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 133 மில்லியனுக்கு 27.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. உள்ளீட்டு மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள் இரண்டினதும் பலவீனமான செயலாற்றலின் காரணமாக மீளாய்விற்குட்படுகின்ற காலப்பகுதியில் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சி 4.6 சதவீதமாக அல்லது ஐ.அ.டொலர் 222 மில்லியனாகவிருந்தது. எனினும், கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள திரவத் தேங்காய்ப் பால் மற்றும் கிறீம் ஏற்றுமதி வருவாய்கள் 2019இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. கறுவாவிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த போதிலும் கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிக்காய்சீவல் என்பவற்றின் குறைவான ஏற்றுமதி அளவுகளின் பிரதான காரணமாக வாசனைத் திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 195 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதற்கெதிராக சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள், இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான பாக்கு ஏற்றுமதிகள் மூலம் முதன்மை வகிக்கப்பட்டு 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் முடிவடைகின்ற 8 மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 100 மில்லியனுக்கு 43.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

- **கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 14 மில்லியனுக்கு 33.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** இவ்வகையின் கீழ் இரும்புத்தாது, உலோகக் கசடு மற்றும் சாம்பல் கட்டி ஏற்றுமதி வருவாய்கள் கணிசமான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

- **2020 மாச்சு தொடக்கம் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள் மற்றும் பெற்றோலியம் அத்துடன் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் இறக்குமதி மீதான குறைவான செலவினம் என்பவற்றின் விளைவாக 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதிகள் மீதான செலவினமானது 2019இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 12,886 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இன் ஓகத்தில்

முடிவடைந்த எட்டு மாதங்களில் ஐ.அ.டொலா் 10,257 மில்லியனுக்கு 20.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கொவிட்-19 பரவல் மூலம் ஏற்பட்ட செலாவணி வீதம் மீதான அழுத்தத்தினைத் தளா்த்துவதற்கும் நிதியியல் சந்தைக் குழப்பங்களை தடுக்கும் பொருட்டும் அரசாங்கமும் மத்திய வங்கியும் 2020 மாச்சு தொடக்கம் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியினைத் தற்காலிகமாக இடைநிறுத்தல் உள்ளடங்கலாக பல அவசர வழிமுறைகளை எடுத்தன. இதற்கு மேலதிகமாக, குறைவான உலக மசகெண்ணெய் விலைகள் மற்றும் வழங்கல் மற்றும் கேள்விச் சங்கிலி இடையூறுகள் என்பவற்றின் காரணமான புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மீதான குறைந்த செலவினம் போன்றவை குறைந்த இறக்குமதிச் செலவினத்திற்கு ஆதரவளித்தன. இதன் விளைவாக அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளிலும் விரைவான வீழ்ச்சியொன்று பதிவாகியது. அதேவேளை எரிபொருள் நீங்கலான இறக்குமதிச் செலவினம் 2019 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலா் 10,309 மில்லியனுடன் ஒப்பிடுகையில் கருத்திற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் ஐ.அ.டொலா் 8,566 மில்லியனுக்கு 16.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.


- **மொத்த இறக்குமதிகளின் ஏறத்தாழ 55 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் அநேகமான துணைத் துறைகளில் பதிவாகிய குறைவான செலவினத்துடன் 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலா் 5,692 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு 22.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எரிபொருட்கள் மீதான செலவினமானது பன்னாட்டு சந்தையில் நிலவிய குறைவான விலைகள் மற்றும் குறைவான இறக்குமதி அளவுகள் என்பன மூலம் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகள் மீதான குறைவான செலவினத்தினால் முன்னிலை வகிக்கப்பட்டு 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலா் 1,691 மில்லியனுக்கு 34.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சராசரி மசகெண்ணெய் இறக்குமதி விலையானது 2019இன் தொடா்புடைய காலப்பகுதியில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலா் 69.13 இலிருந்து 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலா் 45.53 டொலருக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் நிலக்கரி இறக்குமதிகள் மீதான செலவினமானது இக்காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட உயா்வான அலகுகளினால் தூண்டப்பட்டு அதிகரித்தது. புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான குறைவடைந்த ஏற்றுமதிக் கேள்வி மற்றும் வழங்கல் சங்கிலிகளுக்கான இடையூறுகள் என்பவற்றுக்கு அமைவாக புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2019இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலா் 1,457 மில்லியனுக்கு 22.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக, அடிப்படை உலோகங்கள், பிளாத்திக் மற்றும் அதன் பொருட்கள், ஊா்திகள் மற்றும் இயந்திரப் பாகங்கள் இறக்குமதிகள் மீதான செலவினமானது கொவிட்-19 காரணமாக பொருளாதார நடவடிக்கை மெதுவடைதல் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தாக்கம் என்பவற்றை பிரதிபலித்து மீளாய்விற்குட்படுகின்ற காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. எனினும், கோதுமை மற்றும் சோளம், உணவு தயாரிப்புகள் (பிரதானமாக தாவர எண்ணெய்) தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் வேளாண்மை உள்ளீடுகள் (விலங்குத் தீன்) என்பன மீதான இறக்குமதிச் செலவினம் இக்காலப்பகுதியில் அதிகரித்தது.

- **முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது அனைத்து முக்கிய வகைகளிலுமான வீழ்ச்சியொன்றுடன் 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலா் 2,253 மில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 24.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.** உலகளாவிய நோய்த்தொற்றினால் மந்தமடைந்த

5

**வரைபடம் 5.4**

**இறக்குமதிகளின் உள்ளடக்கம் (சன-ஓகத் 2020)**




*மூலங்கள்:* இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஒ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாட்டு வழிமுறைகளின் தாக்கம் என்பவற்றை முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினத்தின் வீழ்ச்சி பிரதிபலிக்கின்றது. பொறியியல் உபகரணங்கள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் மற்றும் மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் என்பவற்றின் குறைவான இறக்குமதிகளைப் பிரதிபலித்து இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 1,325 மில்லியனுக்கு 17.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கட்டடப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது இரும்பு, உருக்கு மற்றும் உருக்குப்பொருட்கள் அத்துடன் சீமெந்து என்பவற்றின் குறைவான இறக்குமதிகளுடன் ஐ.அ.டொலர் 671 மில்லியனுக்கு 33.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தாங்கிகள், நீர்த்தாங்கிகள் மற்றும் முச்சக்கரவண்டிகள் அத்துடன் வர்த்தக ரீதியான வாடகை வண்டிகள் போன்ற வர்த்தக ரீதியான ஊர்திகளின் இறக்குமதியின் வீழ்ச்சிக்கு இசைவாக போக்குவரத்து உபகரணங்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 255 மில்லியனுக்கு 32.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக, இயந்திரங்கள் மற்றும் உபகரணப் பாகங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திரப்பொருட்கள், சுழலிகள், கனிம உற்பத்திகள் (பிரதானமாக கூரைத்தகடுகள்) மற்றும் புகையிரத உபகரணம் மீதான செலவினம் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தது.

5

- **நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான குறைவான செலவினத்தின் மூலம் தூண்டப்பட்டு 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த அதேவேளை உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது.** அதற்கமைய, நுகர்வுப் பொருட்களின் ஒட்டுமொத்த இறக்குமதிகள் 2019இன் தொடர்புடைய காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,499 மில்லியனிலிருந்து 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,300 மில்லியனுக்கு 8.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது தனியாள் வாகனங்களின் குறைவான இறக்குமதிகளால் தூண்டப்பட்டு ஐ.அ.டொலர் 1,277 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு 19.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அனைத்து தனியாள் ஊர்தி வகைகள் மீதுமான குறைவான செலவினத்தின் மூலம் 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் தனியாள் ஊர்தி இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 281 மில்லியனுக்கு 43.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மருத்துவம், மருந்தாக்கல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் (பிரதானமாக செல்லிடத் தொலைபேசிகள்) என்பவற்றுக்கானவை தவிர அனைத்து ஏனைய உணவல்லா நுகர்வுப்பொருட்கள் வகைகளின் இறக்குமதிகளும் 2020 மாச்சு தொடக்கம் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாட்டின் தாக்கத்தினைப் பிரதிபலித்து கருத்திற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவானது பிரதானமாக காய்கறிகள் (முக்கியமாக பெரிய வெங்காயம், பருப்பு, உருளைக் கிழங்கு), சீனி, எண்ணெய் மற்றும் கொழுப்பு (முக்கியமாக தேங்காய் எண்ணெய்), வாசனைத் திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்) மற்றும் பால் உற்பத்திகள் (முக்கியமாக பால் மா) மீதான செலவினத்தின் அதிகரிப்பின் காரணமாக 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,024 மில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், குடிபானங்கள் (முக்கியமாக மதுசாரக் குடிவகைகள்), பழங்கள் (முக்கியமாக அப்பிள் மற்றும் திராட்சை) இறக்குமதி மீதான செலவினம் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.

- **அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகளை விதித்தமை செலாவணி வீதத்தின் மீதும் சென்மதி நிலுவை மீதும் அழுத்தத்தை தளர்த்துவதற்கு பாரியளவில் உதவியது.** 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2020 ஏப்பிறல் தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஒட்டுமொத்த இறக்குமதியின் வீழ்ச்சியின் ஏறத்தாழ 33 சதவீதத்திற்கு (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 775 மில்லியன்) இறக்குமதி கட்டுப்பாடுகளுக்குட்பட்ட பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தின் குறைவு வகைகூறியிருந்தது. இது கருத்திற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சியானது பெற்றோலியம் (மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்) அத்துடன் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் போன்ற இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்குட்படாத பொருட்கள் மூலம் அநேகமாக தூண்டப்பட்டிருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது. எனினும் உணவல்லாத நுகர்வு மற்றும் முதலீட்டுப்பொருட்கள் போன்ற அத்தியாவசியமற்ற

**அட்டவணை 5.1**
**இறக்குமதிச் செலவினத்தை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் தாக்கம்**

ஐ.அ.டொ..மில்லியன்

| பொருட்களின் வகை | 2019இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது ஏப்பிரல் - ஓகத்து 2020 வரையான காலப்பகுதியில் பெறுமதியின் மாற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த இறக்குமதிகள் | இறக்குமதிக் கட்டுப்பாடுகள் கொண்ட வகைகள் | | | | இறக்குமதிக் கட்டுபாடுகள் இல்லாத வகைகள் |
| | | தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டவை | கட்டாயமான கொடுகடன் தேவைப்பாடு | இறக்குமதி உரிமத் தேவைப்பாடு | மொத்தம் | |
| நுகர்வுப் பொருட்கள் | -252.7 | -266.0 | -41.4 | 1.4 | -305.9 | 53.2 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 15.0 | -7.6 | 15.2 | -9.4 | -1.8 | 16.8 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | -267.7 | -258.4 | -56.5 | 10.8 | -304.1 | 36.4 |
| இதில் தனியாள் ஊர்திகள் | -202.1 | -200.6 | - | -0.5 | -201.1 | -1.0 |
| இடைநிலைப் பொருட்கள் | -1,458.8 | -11.8 | -19.5 | - | -31.3 | -1,427.5 |
| இதில் எரிபொருள் | -815.2 | - | 20.6 | - | 20.6 | -835.7 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | -353.1 | -6.6 | - | - | -6.6 | -346.5 |
| முதலீட்டுப்பொருட்கள் | -603.5 | -135.8 | -299.0 | -3.0 | -437.9 | -165.6 |
| **மொத்த இறக்குமதிகள்** | **-2,314.0** | **-413.6** | **-359.9** | **-1.6** | **-775.1** | **-1,538.9** |


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பொருட்களை முதன்மையாக உள்ளடக்குகின்ற இறக்குமதி கட்டுப்பாட்டுகளின் ஒப்பீட்டளவில் குறைந்தளவான உள்ளடக்கத்தை கருத்திற்கொள்ளும் பொழுது மேற்குறித்த குறைவானது கணிசமானதாகும் (கணிசமான உணவு மற்றும் குடிபானங்கள் நுகர்வுப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அநேகமான இடைநிலைப்பொருட்கள் இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படவில்லை).

### வர்த்தக மாற்று விகிதம்

- **இறக்குமதி விலைகள், ஏற்றுமதி விலைகளின் வீழ்ச்சியினை விட விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையினால் வர்த்தக மாற்று விகிதம், 2019இன் தொடர்புடைய காலப்குதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்துடன் முடிவடைகின்ற 8 மாதகாலப்பகுதியில் மேம்பட்டது.** மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச்சுட்டெண் 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்து உபகரணங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், மர மற்றும் கடதாசி உற்பத்திகள், விலங்குத் தீன் உள்ளடங்கலாக கைத்தொழில் ஏற்றுமதிகளில் பதிவாகிய விலைக்குறைப்புகள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. எனினும் புடவைகள் மற்றும் ஆடைகள், பிளாத்திக் மற்றும் அதன் பொருட்கள் அத்துடன் உணவு, குடிபானங்கள், புகையிலை ஏற்றுமதி விலைகள் உயர்வடைந்தன. தேயிலை ஏற்றுமதிகளின் விலை சிறிதளவு வீழ்ச்சியடைந்த போதிலும் சிறு வேளாண்மை உற்பத்திகள் மற்றும் தேங்காய், கடலுணவு மற்றும் வாசனைத் திரவியங்கள் மூலம் முதன்மை வகிக்கப்பட்டு வேளாண்மை மற்றும் கனிமப்பொருட்கள் ஏற்றுமதிகளின் விலைகள் அதிகரித்தன. அதேவேளை, அனைத்து முக்கிய இறக்குமதி விலைகளிலும் பதிவாகிய விலை வீழ்ச்சிகளுடன் ஒட்டுமொத்த இறக்குமதிச் விலைச்சுட்டெண் 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் 9.2 சதவீதத்தினால் குறைவடைந்தது. இடைநிலைப்பொருட்கள் இறக்குமதிகளின் கீழ் எரிபொருள், வேளாண்மை உள்ளீடுகள், வளமாக்கி, அடிப்படை உலோகங்கள் மற்றும் கனிம பொருட்களில் பதிவாகிய குறைவான விலைகள், இறக்குமதி விலைச்சுட்டெண்ணின் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்தன. எனினும், புடவைகள் மற்றும் ஆடைகளின் இறக்குமதி விலைகள் இக்காலப்பகுதியில் சிறிதளவு அதிகரித்தன. போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் கட்டடவாக்கப்பொருட்களின் விலைகள் அதிகரித்தபோதிலும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் குறைவான விலைகளினால் முதலீட்டு பொருட்களுக்கான விலைச்சுட்டெண்ணானது வீழ்ச்சியடைந்தது. தனியாள் ஊர்திகள் மற்றும் வீட்டுடமை அத்துடன் தளபாடப்பொருட்கள் தவிர உணவல்லா நுகர்வுப்பொருட்களின் கீழ் அனைத்து துணை வகைகளினதும் குறைவான விலைகளின் காரணமாக நுகர்வுப்பொருட்களுடன் தொடர்புடைய விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக வாசனைத் திரவியங்கள், காய்கறிகள், பால் உற்பத்திகள், கடலுணவு, குடிபானங்கள் மற்றும் சீனி அத்துடன் இனிப்புப் பண்டங்கள் உள்ளடங்கலாக உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதி விலைகள் அதிகரித்தன. ஒட்டுமொத்தமாக வர்த்தக மாற்று விகிதம் 2019இன் தொடர்புடைய காலப்பகுதியில் 104.2 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2020 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் 107.6 சுட்டெண் புள்ளிகளுக்கு ஆண்டிற்கு ஆண்டு 3.3 சதவீதத்தினால்

வரைபடம் 5.5
வர்த்தக மாற்றுவிகிதமும் வர்த்தக சுட்டெண்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மேம்பட்டன. அதேவேளை எரிபொருள் தொடர்புபட்ட உற்பத்திகள் நீங்கலாக வர்த்தக மாற்று விகிதம் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு 0.4 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

### பணிகளிலான வர்த்தகம்

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தின் காரணமாக பணிகள் கணக்கானது 2020 முதலரைப்பகுதியில் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.** சுற்றுலாக் கைத்தொழிலானது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் விளைவுகளிலிருந்து 2019 இறுதியில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் விரைவான வேகத்தில் மீட்சியடைந்தபோதிலும் 2020 மாச்சின் பிந்திய பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் மூடப்பட்டமையினால் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் ஸ்தம்பிதமடைந்தன. இலங்கையர்கள் வெளிநாட்டுக்கு பயணிப்பதன் மூலம் ஏற்படுகின்ற செலவினத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பயண வெளிப்பாய்ச்சல்களும் புலம்பெயர் பணியாளர்கள் மற்றும் வெளிநாட்டில் வாழ்கின்ற இலங்கையர்களுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட புறப்படுகைகளுடன் விரைவாக வீழ்ச்சியடைந்தன. விமானப் பயணம் நிறுத்தப்பட்டமை விமானப் போக்குவரத்து பயணிகள் பணிகள் கணக்கின் வருவாய்கள் மற்றும் செலவினம் என்பவற்றின் மீதும் குறிப்பிடத்தக்க குறைவினை விளைவித்தது. அதேவேளை கடல் மற்றும் விமான போக்குவரத்துடன் தொடர்புபட்ட சரக்குப் பணிகளும் உலகளாவிய ஏற்பாட்டு பணி ஒழுங்குபடுத்தல்களில் தாமதங்கள் மற்றும் வணிகப்பொருள் வர்த்தகத்தில் குறைவு போன்றவை காரணமாக தடைப்பட்டன. கட்டுமாணப் பணிகள், காப்புறுதி மற்றும் நிதிப்பணிகள் உள்ளடங்கலாக ஏனைய அனைத்து பணிகளும் இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டு இதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் குறைவடைந்தன. எவ்வாறாயினும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு இணையத்தள அடிப்படையிலான பணி வழங்குநர்கள் மூலம் இணையவழி வலைத்தள பிரயோகங்கத்துடன் தொடர்புடைய பணிகளுக்காக எல்லைகடந்த கொடுக்கல்வாங்கல்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றின் மூலம் துணையளிக்கப்பட்டு கணனிப் பணிகள் துறையின் உட்பாய்ச்சல் 2020 முதலரைப்பகுதியில் சாதமாக வளர்ச்சியினைப் பதிவுசெய்து தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. இம்முன்னேற்றங்களுடன் பணிகள் துறையின் மிகையானது 2019 முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,545 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 901 மில்லியனுக்கு சுருக்கமடைந்தது.

### சுற்றுலாத்துறை அபிவிருத்திகள்

- **2019இன் இறுதியளவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்டதையும் விட வேகமாக மீண்ட சுற்றுலாப்பயணிகளின் வருகைகள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து வெளிநாட்டுப் பயணிகளிற்கு வீசா வழங்குதல் இடைநிறுத்தப்பட்டதுடன் ஸ்தம்பித நிலையினை அடைந்தது.** 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 507,311 ஆக குறிப்பிடத்தக்களவு சீர்குலைந்த அதேவேளை 2020 மாச்சு 18 தொடக்கம் சுற்றுலாப்பயணிகளின் வருகைகளெதுவும் இடம்பெறவில்லை. இத்தகைய அபிவிருத்திகளுடன் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுகின்ற சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஆண்டு காலப்பகுதியில் 2020 செத்தெம்பர் வரை ஐ.அ.டொலர் 956 மில்லியனாகக் காணப்பட்டன. அனைத்து பயணிகள் விமான மற்றும் கப்பல் வருகைகள் இடைநிறுத்தப்பட்டவுடன் இலங்கைச் சுற்றுலாவானது வெளிநாட்டு உறவுகள் அமைச்சு, சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் தொடர்புடைய இராஜதந்திர தூதரகங்களின் கூட்டிணைப்புடன் 2020 மாச்சு இறுதியில் இலங்கையிலிருந்த ஏறத்தாழ 18,000 சுற்றுலாப்பயணிகளுக்கு அவர்கள் சொந்த நாட்டிற்கு திரும்புவதற்கு அல்லது நீடிக்கப்பட்ட

5


காலப்பகுதியொன்றில் இலங்கையில் தங்குவதற்கு விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டது. அதற்கமைய, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமானது இலங்கையில் நீடித்த காலப்பகுதியொன்றுக்கு தங்குவதற்கு தீர்மானித்த அனைத்து வெளிநாட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட வீசாக்களின் செல்லுபடியான காலத்தை நீடித்தது.

- **ஆண்டின் தொடக்கத்தில் சுற்றுலா கைத்தொழில் வாய்ப்புமிக்க முதலீட்டாளர்களிடமிருந்து கணிசமான ஆர்வத்தினை ஈர்த்துக்கொண்டது.** 2020 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கை சுற்றுலா அதிகார சபையானது ஐ.அ.டொலர் 19.9 மில்லியன் பெறுமதியுடைய பன்னிரெண்டு கருத்திட்டங்களுக்கு அனுமதியளித்தது. 2020 செத்தெம்பரில் முடிவடையும் ஒன்பது மாத காலப்பகுதியில் கருப்பொருள்சார் பூங்கா கருத்திட்டம் உள்ளடங்கலாக 42 செயற்றிட்டங்களுக்காக ஐ.அ.டொலர் 720.7 மில்லியன் பெறுமதியுடைய புதிய முன்மொழிவுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுக்கொண்டது. அதேவேளை 2020இன் ஒன்பது மாத காலப்பகுதியில் கல்பிட்டி, குச்சவெளி, யால (பலாத்துபனை), தெத்துவ மற்றும் பெந்தோட்ட ஆகிய இடங்களில் தனித்துவமான கருப்பொருட்களின் கீழ் நான்கு முக்கிய உல்லாச விடுதிகளின் அபிவிருத்தியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை முன்னேற்றம் கண்டது. கல்பிட்டி ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா உல்லாச விடுதிக் கருத்திட்டமானது முக்கிய எண்ணக்கருவான "சமுத்திர அடிப்படையிலான தீவு உல்லாச விடுதி" என்பதனை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டுள்ள அதேவேளை குச்சவெளி கடற்கரை உல்லாசவிடுதி கருத்திட்டமானது கிழக்குப் பிராந்தியத்தில் உயர் சந்தையை இலக்குவைத்த சுற்றுலா கருத்திட்டமாகவுள்ளது.

- **சுற்றுலா கைத்தொழிலுக்கு உதவுவதற்கு சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான தற்போதைய படுகடனை செலுத்தும் காலநீடிப்புக்கு மேலதிகமாக சுற்றுலா அமைச்சினாலும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினாலும் விசேட நிவாரணப் பொதியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.** உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கொவிட்-19 நோய்ப்பரவல் காரணமாக சுற்றுலா கைத்தொழில் எதிர்கொண்ட சவால்களை தீர்க்கும் நோக்குடன் மத்திய வங்கி 2019 ஏப்பிறல் தொடக்கம் சுற்றுலாத்துறையில் காணப்படுகின்ற வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு படுகடனை செலுத்துவதற்கான காலநீடிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதுடன் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற பயண கட்டுப்பாடுகள் பொருளாதார நடவடிக்கைக்கான இடையூறுகளை கருத்திற்கொண்டு பின்னர் 2021 மாச்சு 31 வரை திட்டம் நீடிக்கப்பட்டது. அதேவேளை 2020 யூனில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த சுற்றுலாப்பயண நிறுவனங்கள் மற்றும் ஆளணிக்கு விசேட நிவாரணப் பொதியொன்றினை அறிமுகப்படுத்தியது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலில் நேரடியாக ஈடுபடுகின்ற 144,000 சுற்றுலா ஆர்வலர்கள் இவ்வழிமுறைகளிலிருந்து நன்மைபெறுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிவாரணப் பொதியானது பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா வழிகாட்டிகளுக்கான மற்றும் சுற்றுலாப் பயண சாரதிகளுக்கான ஒரேதடவை கொடுப்பனவு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த தங்குமிட வழங்குநர்களுக்கு பொதுப்பயன்பாட்டு பட்டியல் கொடுப்பனவுகளில் சலுகை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த சுற்றுலா பணிவழங்குநர்களுக்கும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் 2021இற்கான உரிமக்கட்டணத்தில் கழிவு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக முறைசாரா துறை நிறுவனங்களுக்கு 6 மாதங்களுக்கான தற்காலிக உரிமம் வழங்கப்பட்டதுடன் பதிவுக்கட்டணங்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் தளர்த்தப்பட்டன.

வரைபடம் 5.6

**சுற்றுலாப் பயணிகளின் வருகைகளும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களும்**




*மூலங்கள்:* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

- **நடைமுறைக்கணக்கு பற்றாக்குறைக்கெதிராக காப்பு வழங்குவதில் பணிகள் ஏற்றுமதிகள் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்மையினால் பணிகள் ஏற்றுமதிகளின் முழுமையான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வது மிகவும் முக்கியமாகும்.** இப்பின்னணியில் சுற்றுலாத்துறைக்கு மேலதிகமாக தகவல் தொழில்நுட்பத்தினால் இயலுமைப்படுத்தப்பட்ட வியாபார செயன்முறைப்படுத்தல் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல், அறிவுசார் செயன்முறைப்படுத்தல் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் உள்ளடங்கலாக கணனிப்பணிகள், கட்டடவாக்கப் பணிகள், நிதியியல் பணிகள், நிபுணத்துவப் பணிகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் என்பன பணிகள் தொழில்துறையில் குறிப்பிடத்தக்க வாய்ப்புகளுடன் வளர்ந்துவரும் துறைகளாக தோற்றம்பெற்றுள்ளன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியிலும் கூட பணிகளின் தடங்கலற்ற தொழிற்பாடுகளின் மூலம் தகவல் தொழில்நுட்ப/ வியாபார செயன்முறைப்படுத்தல் பணிகள் துறைகளிலிருந்தான வருவாய்கள் ஆரோக்கியமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. எனினும் இப்பணிகள் தொழில்துறையுடன் தொடர்புடைய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை இனங்காண்பது தொடர்பிலான குறிப்பிடத்தக்க தரவு இடைவெளியொன்று இருந்துவருகின்றது. தற்போது இப் புள்ளிவிபரங்கள் அளவீடு அடிப்படையிலான மதிப்பீடொன்றினால் தொகுக்கப்படுகின்றன. இதனால் அதிகரித்த விடயப்பரப்புடன் உரிய கால புள்ளிவிபரங்களை பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு மத்திய வங்கியானது தற்போது "பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை" என்றழைக்கப்படும் புதிய தரவுசேகரித்தல் முறைமையினை அறிமுகப்படுத்தும் செயன்முறையினை முன்னெடுக்கிறது. வங்கித்தொழில் ஊடாக இம்முறைமை நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பணிகள் துறையின் செயற்பரப்பினை அதிகரித்தல் மீது குறிப்பான கவனம் செலுத்தி அனைத்து எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்களினதும் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் மீதான உரிய கால தரவுகள் கிடைக்கப்பெறும் தன்மையினை உறுதிசெய்யும். பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது பணிகள் துறை புள்ளிவிபரங்களை மேம்படுத்துவதனை இயலச்செய்கின்ற அதேவேளை தரவுத் தரத்தினை குறிப்பிடத்தக்களவு மேம்படுத்துகின்ற தனித்துவமான நோக்கு குறியீடு முறைமையொன்றினூடாக கொடுக்கல்வாங்கல் நோக்கத்தினை அடிப்படையாகக் மிகச்சிறிய மட்ட தரவுகளின் அறிக்கையிடுதலை வசதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது 2021இன் இறுதியளவில் தொழிற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### முதலாந்தர வருமானம்

- **முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2020இன் முதலரைப்பகுதியில் சுருக்கமடைந்தது.** முதலாந்தர வருமானக் கணக்கு பற்றாக்குறையானது 2019இன் தொடர்புடைய காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,119 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,041 மில்லியனுக்கு வகைகூறியது. வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் தொடர்புடைய மீள் முதலிடப்பட்ட வருவாய்களின் குறைவு மற்றும் நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளினால் சொந்த நாட்டிற்கு அனுப்பப்பட்ட பங்குலாபங்களின் குறைவு என்பன இதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. மேலும் ஐக்கிய அமெரிக்க பெடரல் நிதிய வீதத்தின் குறைப்புக்கு அமைவாக லண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்தில் துரிதமான வீழ்ச்சியுடன் மாறுகின்ற வட்டி வீதங்களில் குறைப்பின் பிரதான காரணமாக அரசாங்கத்தினாலும் தனியார் துறையினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிச் செலவினத்தில் குறைவும் அவதானிக்கப்பட்டது. நாட்டிற்கான பன்னாட்டு முறியின் கூப்பன் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சொத்துப்பட்டியல் முதலீடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 436 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 515 மில்லியனுக்கு அதிகரித்தன. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் குறைவான வெளிநின்ற முதலீட்டு நிலையின் காரணமாக திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வெளிநாட்டு உடைமை மீதான கூப்பன் கொடுப்பனவுகள் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தன. அதேவேளை வங்கித்தொழில் துறையின் முதலீட்டு வருமானம் குறைவடைந்த அதேவேளை மத்திய வங்கியின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் முதலீடு மீதான வருமானம் 2019இன் முதலரைப்பகுதியில் பதிவாகிய மட்டங்களிலேயே தொடர்ந்துமிருந்தது.

5


## இரண்டாந்தர வருமானம்

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக 2020 மாச்சு தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் மிதமடைதலொன்று அவதானிக்கப்பட்டமைக்கு மத்தியிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் அதன் பின்னர் எதிர்பார்க்கப்பட்டதை விட உயர்வாகப் பதிவாகின.** 2020 முதலரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,270 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,980 மில்லியனுக் 8.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சில புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்கு திரும்பியமை, வெளிநாடுகளிலுள்ள சில புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொண்ட குறைவான சம்பளங்கள் அதேபோன்று தொழில் இழப்புகள் என்பனவற்றினால் 2020 மாச்சு தொடக்கம் மே வரையில் தொழிலாளர் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று பதிவாகியது. எனினும், அதன் பின்னர் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஆரோக்கியமிக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி வீதம் அவதானிக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும், உலகளாவிய பொருளாதார மெதுவடைவதல் காரணமாக மத்திய கிழக்கு உள்ளடங்கலாக அனைத்து புலம்பெயர் அடைவிடங்களிலும் தொழில்வாய்ப்புகள் குறைந்தமை தொழிலாளர் பணவனுப்பல்களில் குறுகிய காலம் தொடக்கம் நடுத்தர கால வளர்ச்சிப் பாதையில் அதிகரித்த நிச்சயமற்றதன்மைக்கு வழிவகுத்துள்ளது.

- **தொழிலாளர் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய பாதிக்கப்படும்தன்மைகளையும் எதிர்காலத்தில் சாத்தியமான நிச்சயமற்றதன்மைகளுக்கு முகங்கொடுப்பதற்கான தயார் நிலைக்கான**

வரைபடம் 5.7

தொழிலாளர் பணவனுப்பல்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**தேவையினையும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மீளவழியுறுத்தியுள்ளது.** உலகளாவிய நோய்த்தொற்றின் நேரடி விளைவாக சில புலம்பெயர் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரங்களை அதேபோன்று உயிர்களை இழந்த அதேவேளை சிலர் குறைந்த சம்பளங்களுடன் தொடர்ந்தும் பணியாற்றுகின்றனர். இத்துறையின் தேசிய முக்கியத்துவத்தினையும் பல்வேறு புவிசார்அரசியல் மற்றும் பொருளாதார அதிர்வுகளுக்கான அதன் பாதிக்கப்படும்தன்மையினையும் கருத்திற்கொண்டு இத்துறையின் ஆர்வலர்களுக்கு ஆதரவளிப்பதற்கு அதிக பாதுகாப்பு அவசியமாகும். எனவே வெளிநாட்டில் தங்கியிருக்கின்ற காலப்பகுதியில் எதிர்பாராத நிகழ்வுகளின் பொழுது தமது தொழில்களை இழக்கின்ற பணியாளர்களுக்கும் உடலியல் துஃபிரயோகம், நிரந்தர அங்கவீனம் அல்லது உயிரிழத்தல் போன்ற நிகழ்வுகளில் முறையாக உருவாக்கப்பட்ட காப்புறுதித் திட்டம் உள்ளடங்கலாக மிகவும் இலக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகள் முக்கியத்துவமிக்கதாகக் காணப்படுகின்றன. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கான அத்தகைய திட்டங்களும் கொள்கைசார்ந்த முயற்சிகளும் இலங்கையின் சென்மதி நிலுவைக்கு துணையளிக்கின்ற மிகவும் முக்கியமான துறைகளிலொன்றான பணனுப்பல்களின் எதிர்கால நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை உறுதிசெய்யும்.

## நடைமுறைக்கணக்கு மீதி

- **வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான அபிவிருத்திகளின் தாக்கத்தின் காரணமாக 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது.** நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையானது 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 351 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 792 மில்லியனாகவிருந்தது. 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதலரைப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 26.4 சதவீதத்தினால் குறைவடைந்த அதேவேளை இறக்குமதிகள் 20.0 சதவீதத்தினால் குறைவடைந்தன. ஒட்டுமொத்தமாக வர்த்தகப் பற்றாக்குறையானது 2019இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 335 மில்லியனால் சுருக்கமடைந்தது. குறிப்பாக சுற்றுலாத்துறை மீதான உலகளாவிய

5

நோய்த்தொற்றின் பாதகமான தாக்கத்தினால் பணிகள் துறை மிகை 2019இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 645 மில்லியனால் சுருக்கமடைந்தது. மாச்சு முதல் மே மாதம் வரை தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட குறைவு இரண்டாந்தர வருமான கணக்கில் குறைவடைந்த மிகையொன்றினைத் தோற்றுவித்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் தொடர்புடைய மீள் முதலீட்டு வருவாய்களின் குறைவு மற்றும் நேரடி முதலீட்டுத் தொழில் முயற்சிகளின் பங்கிலாபங்களை சொந்தநாட்டிற்கு அனுப்புதலில் சிறிதளவு குறைவு என்பவற்றின் பிரதான காரணமாக முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## மூலதனக் கணக்கு மீதி


- **மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2020இன் முதலரைப்பகுதியில் மிதமாகவே காணப்பட்டன.** பிரதானமாக அரசாங்கத்திற்கான மூலதன கொடைக் கிடைப்பனவில் குறைவு காரணமாக தேறிய அடிப்படையில் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள், 2019இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 18 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 4 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

## நிதியியல் கணக்கு

- **தேறிய பொறுப்புகள் உறப்படுதலானது 2019இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,406 மில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 935 மில்லியனால் குறைவடைந்தது.** 2020இன் முதலரைப்பகுதியில் பொறுப்புக்களின் வீழ்ச்சிக்கு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் உயர்வான வெளிப்பாய்ச்சல்கள், பங்குச் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீட்டின் தேறிய வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் வங்கித்தொழில் துறையினால் வைத்திருக்கப்பட்ட நாணயம் மற்றும் வைப்புகளில் ஏற்பட்ட குறைவு என்பன பிரதான காரணமாக அமைந்தன. 2020 மாச்சில் சீனா அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதியின் கிடைப்பனவுக்கு புறம்பாக 2020 முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மந்தமடைந்தே காணப்பட்டன. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டு கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடு, 2020 முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 345 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 535 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் கிடைப்பனவுகளை விட குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும். 2020இன் முதலரைப்பகுதியில் ஆதன அபிவிருத்தி, விடுதிகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துறைகளிலேயே முக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் பதிவாகியிருந்தன. ஆயினும், இவற்றில் அநேகமானவை புதிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு கருத்திட்டங்களுக்கான பங்குரிமைக் கிடைப்பனவுகளை விட தாபிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு மூலதனமாகக் காணப்படுகின்ற பங்குரிமை வடிவிலான சொத்துப்பட்டியல் முதலீடுகள், 2019இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 9 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 108 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் சந்தையானது வெளிநாட்டு முதலீடுகளின் குறிப்பிடத்தக்க வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்களை அனுபவித்து 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 96 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 492 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினை ஏற்படுத்தியது. அதேவேளை, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களுக்கான தேறிய கடன் உட்பாய்ச்சல்களைப் பிரதானமாக

வரைபடம் 5.8

சென்மதி நிலுவை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பிரதிபலித்து வெளிநாட்டு கடன்பொறுப்புகள் 2020இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 795 மில்லியனால் அதிகரித்தன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக கொடுகடன்களின் மீளச்செலுத்தல்களுடன் வதிவற்றோரினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2020இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. மேலும், மத்திய வங்கியினால் முகாமைசெய்யப்படுகின்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புகளைப் பிரதானமாக உள்ளடக்குகின்ற ஏனைய செலுத்தப்படவேண்டிய கணக்குகளும் 2020இன் முதலரைப்பகுதியில் குறைவடைந்தன.

- **நிதியியல் சொத்துகளின் தேறிய கையகப்படுத்தலானது 2019இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,819 மில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,359 மில்லியன்களால் வீழ்ச்சியடைந்தது.** நிதியியல் சொத்துக்களின் வீழ்ச்சிக்கு இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளுடன் இணைந்து ஆண்டின் முதலரைப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஐ.அ.டொலர் 1,515 மில்லியன் கொண்ட வீழ்ச்சி பிரதான காரணமாக அமைந்தது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக 2020 மாச்சு - ஏப்பிறல் காலப்பகுதியில் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிப்பாய்ச்சல் காரணமாக செலாவணி வீதத்தின் மிதமிஞ்சிய தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வழங்கலும் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தது. 2020இன் முதலரைப்பகுதியில் வங்கித் தொழில்துறையின் நாணயம் மற்றும் வைப்பு சொத்துகள் ஐ.அ.டொலர் 22 மில்லியன் கொண்ட சிறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினால் வதிவற்றோருக்கு வழங்கப்படும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் வீழ்ச்சியடைந்த அதேவேளை உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட கொடுப்பனவு இடர்பாடுகள் காரணமாக தமது கொள்வனவாளர்களுக்கு இலங்கை ஏற்றுமதியாளர்கள் சலுகைகளை வழங்கியதன் மூலம் ஆண்டின் முதலரைப்பகுதியில் தனியார் துறையினால் வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் அதிகரித்தன.

- **கொவிட்-19 நோய்த்தொற்றின் உலகளாவிய பரவலினைத் தொடர்ந்து நிதியியல் கணக்கு உட்பாய்ச்சல்களுக்கு புத்துயிரளிப்பதற்கு அரசாங்கத்தினாலும் மத்திய வங்கினாலும் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.** ஆண்டின் செத்தெம்பர் மாதம் வரை நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மட்டுப்பட்டதாகக் காணப்பட்டன. மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சேர்விஸ் இனால் நாட்டிற்கான தரப்படுத்தல் குறைக்கப்பட்டதற்கு மத்தியிலும் இலங்கை அனைத்து வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளையும் உறுதியாக நிறைவேற்றி கறைபடியாத அதன் வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவு பதிவினைப் பேணியது. 2020 ஒத்தோபர் முதல் வாரத்தில் ஐ.அ.டொலர் 1 பில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவின் மூலம் இந்நிலைமை மேலும் இணைசேர்க்கப்பட்டிருந்தது. ஏதேனும் செலாவணி வீத இடர்நேர்வுகளுக்குட்படாது வெளிநாட்டு முதலீட்டிற்கு வசதிப்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பரஸ்பர பரிமாற்று ஒப்பந்த ஒழுங்கொன்றின் மூலம் நாட்டில் முதலிடுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான ஆக்கபூர்வமான சூழலொன்று உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும், அரசாங்கமானது கூட்டு வெளிநாட்டு கடன்வசதி அதேபோன்று மரபுசாரா சந்தைகளில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதற்கான சாத்தியத்தினை தேடுதல் உள்ளடங்கலாக எதிர்கால நிதியிடலை உறுதிசெய்வதற்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை மேற்கொண்டுள்ளது. மேலும், சிறப்பு வைப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்தியமையும் நாட்டிற்கு மேலதிக வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை இயலச்செய்துள்ளது. வணிகப்பொருள் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கின்ற அதேவேளை அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதனை உறுதிசெய்வதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளுடன் ஒன்றிணைந்து இவ்வழிமுறைகள் முன்னோக்கிக் காணப்படுகின்ற முக்கியமான சவால்களுக்கு மத்தியில் வெளிநாட்டுத்துறைக்கு அவசியமான உறுதிப்பாட்டினை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

- **பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் பிரதிபலிக்கப்பட்டவாறு இலங்கையின் வதிவற்றோர்களுடனான வெளிநாட்டு சொத்து நிலைமை 2019இன் இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 12,985 மில்லியனிலிருந்து 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 12,189 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.**

5

5

வெளிநாட்டு சொத்துகளின் இருப்புநிலையானது பிரதானமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 7,642 உடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 6,695 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக குறைவடைந்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாரியளவு வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அத்துடன் ஒப்பீட்டு ரீதியாக குறைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் என்பனவற்றினால் ஒதுக்குச் சொத்து நிலை வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளுக்கான முக்கிய உட்பாய்ச்சல்கள் 2020 மாச்சில் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணயத் தவணை நிதியிடல் வசதியின் கிடைப்பனவினை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை இலங்கையில் வதிவோரின் வெளிநாடுகளிலான நேரடி முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நேரடி முதலீட்டுச் சொத்து நிலையானது 2019இன் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 1,497 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 1,511 மில்லியனுக்கு சிறிதளவு அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்பு அத்துடன் பெறவேண்டிய ஏனைய கணக்குகள் வடிவிலான சொத்து நிலைமையானது 2020இன் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலையில் தேறிய அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தி ஆண்டின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியளவில் அதிகரித்தது. அதேவேளை, வைப்புகளை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறையினால் வதியாதோருக்கு வழங்கப்படுகின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களைப் பிரதிபலிக்கின்ற நிலுவையாகவுள்ள வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் சொத்து நிலையானது இலங்கை ஏற்றுமதிக் கம்பனிகளால் வழங்கப்படும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களில் அதிகரிப்பின் மூலம் 2019 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியில் அதிகரித்தது.

- **பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் பிரதிபலிக்கப்பட்டவாறு வதிவற்றோர்களுக்கான இலங்கையின் மொத்த பொறுப்புகளின் நிலைமை ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 2020 யூன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனால் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** மொத்தப் பொறுப்பு நிலைமையானது 2019 திசெம்பர் இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 65,252 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 59,152 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கின் வர்த்தகப்படுத்தத்தக்க சாதனங்களின் சந்தை விலை மதிப்பீட்டின் அடிப்படையில் பன்னாட்டு முதலீட்டு நிலைமைக்கூற்று தொகுக்கப்படுவதனால் இக்குறிப்பிடத்தக்க வீழ்ச்சியானது இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றின் காரணமாக வெறுமனே விலை மதிப்பீட்டு இழப்புகளிலிருந்து தோன்றுகின்ற தொழில்நுட்ப ரீதியான முக்கியத்துவம் கொண்டதாகவே அமைந்துள்ளது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் மிகைப்படுத்தப்பட்டிருந்த பன்னாட்டு மூலதனச் சந்தைகளின் நிச்சயமின்மைகள் காரணமாக உயர்வான இரண்டாந்தரச்சந்தை விளைவுகளுடன் ஒத்ததாக 2019 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 15.6 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இலங்கையின் ஏற்கனவே காணப்படுகின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமையானது 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 11.0 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் நேரடிமுதலீட்டு பொறுப்பு நிலைமையும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் சந்தை விலைகளின் குறிப்பிடத்தக்க குறைவின் காரணமாக குறைவடைந்தது. எனினும், வைப்புகளை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு கடன்பொறுப்புகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்ட அதேவேளை அரசாங்கத்தின் வெளிநாட்டுப் பொறுப்புகளும் 2020 முதலரைப்பகுதியில் சிறிதளவு அதிகரித்தன. மேலும் இலங்கை இறக்குமதியாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலுவையாகவுள்ள வர்த்தக கொடுகடனானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் குறிப்பிடத்தக்களவு வர்த்தகக் கொடுகடன்கள் மீள்கொடுப்பனவு செய்யப்பட்டதனால் வீழ்ச்சியடைந்த அதேவேளை 2020இன் முதலரைப்பகுதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புநிலை குறைவடைந்தமையினால் மத்திய வங்கியின் நிலுவையாகவுள்ள பொறுப்புகளும் வீழ்ச்சியடைந்தன.

- **வதியாதோருடன் வைத்திருக்கப்படும் இலங்கையின் மொத்த சொத்துகள் மற்றும் பொறுப்புகள் நிலைமைகளுக்கிடையிலான வேறுபாடாகக் காணப்படுகின்ற இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை, 2020 யூன் இறுதியில்**

**மேம்பட்டது.** இவ்வீழ்ச்சிக்கு இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளின் விலை மதிப்பீட்டு இழப்புகள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் சந்தை விலைகளின் குறைவு அதேபோன்று மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் வீழ்ச்சியின் காரணமாக சொத்து நிலைமையின் குறைவு என்பவற்றின் காரணமாக அமைந்தன.

### வெளிநாட்டுப் படுகடன் நிலைமை


- **இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2020இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.** வெளிநாட்டுப் படுகடன் இருப்பு நிலைமையானது 2019இன் இறுதியில் ஐ.அ.டொலா் 55.9 பில்லியனிலிருந்து 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலா் 50.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இலங்கையின் வெளிநின்ற நாட்டுக்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் இக்காலப்பகுதியில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மீளெடுப்புகள் மூலம் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்களின் வதியாதோரின் உடைமையின் வீழ்ச்சி என்பவை இதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. எனினும் அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் வெளிநின்ற தொகை மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் அதிகரித்தது. மத்திய வங்கி மூலம் முகாமை செய்யப்படுகின்ற ஆசியத் தீா்ப்பனவு ஒன்றியப் பொறுப்புகளில் அதே வேளை ஆண்டின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூன் இறுதியில் வீழ்ச்சியடையந்தமையினால் இலங்கை மத்திய வங்கியின் நிலுவையாகவுள்ள வெளிநாட்டுப் படுகடன் வீழ்ச்சியடைந்தது. எனினும், வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களின் அதிகரிப்பு அத்துடன் நாணயம் மற்றும் வைப்புகளின் குறைவு என்பவற்றின் ஒருங்கிணைந்த தாக்கத்தின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் படுகடன் நிலுவைகள் சிறிதளவு அதிகரித்தன. இதற்கு மாறாக, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்கள், வெளிநின்ற படுகடன் பிணையங்கள் சந்தை விலைகளின் குறைவு அதேபோன்று இலங்கை இறக்குமதியாளா்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வா்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் குறைவு என்பனவற்றினால் தனியாா் துறை மற்றும் அரசிற்கு சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2020இன் முதலரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. மேலும், நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடானது இக்காலப்பகுதியில் முக்கிய நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளில் பல கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் மற்றும் பங்குரிமையாளா் முற்பணங்களைப் பெற்றுக்கொண்டதனால் ஆண்டின் முதலரைப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

### ஒதுக்குச் சொத்து நிலைமை

- **மொத்த அலுவல்சாா் ஒதுக்குகள் 2019இன் இறுதியில் பதிவாகிய ஐ.அ.டொலா் 7.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பா் இறுதியளவில் ஐ.அ.டொலா் 6.7 பில்லியனாகக் குறைவடைந்தது.** வெளிநாட்டு நாணயப் படுகடன் தீா்ப்பனவு கொடுப்பனவுகள், பிரதானமாக வெளிநாட்டுக் கருத்திட்டக் கடன்களின் மூலதனக் கொடுப்பனவுகள், வெளிநாட்டு நாணயத் தவணை நிதியிடல் வசதி மீள்கொடுப்பனவுகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பன 2020 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாதகாலப்பகுதியில் மொத்த அலுவல்சாா் ஒதுக்கு வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. மேலும், 2020இன் ஒத்தோபரின் முற்பகுதியில் மொத்த அலுவல்சாா் ஒதுக்குகளைப் பயன்படுத்தி ஐ.அ.டொலா் 1 பில்லியன் கொண்ட முதிா்ச்சியடைகின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் மீள்கொடுப்பனவும் வசதிப்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்குகளுக்கு

வரைபடம் 5.9

மொத்த அலுவல்சாா் ஒதுக்குகளும் இறக்குமதி மாதங்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

குறைநிரப்புவதற்கான முக்கிய உட்பாய்ச்சல்களாக ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதியின் கிடைப்பனவு, ஐ.அ.டொலர் 670 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கடன் மற்றும் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க் நிதியத்தின் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த ஒழுங்குகளின் கிடைப்பனவு ஆகியன காணப்பட்டன. அதற்கமைய, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2020 செத்தெம்பர் இறுதியளவில் 4.6 மாத இறக்குமதிகளுக்கும் நாட்டின் குறுகிய காலப்படுகடன் மற்றும் பொறுப்புகளின் 49 சதவீதத்திற்கும் போதுமானதாகயிருந்தது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துகளையும் உள்ளடக்குகின்ற மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2019இன் இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 10.4 பில்லியனிலிருந்து 2020 ஓகத்து இறுதியளவில் ஐ.அ.டொலர் 10.3 பில்லியனுக்கு சிறிதளவு குறைவடைந்தது (தரவு 2020 ஓகத்து இறுதிவரையே கிடைக்கப்பெற்றுள்ளது). இக்குறைவானது 2020 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 212 மில்லியனால் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைந்தமை மற்றும் ஐ.அ.டொலர் 156 பில்லியனால் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு சொத்து உடமைகளில் அதிகரிப்பு என்பவற்றின் இணைந்த தாக்கமொன்றாகவிருந்தது. மொத்த பன்னாட்டு ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கம் 2020 ஓகத்து இறுதியளவில் 7.2 மாதங்களுக்கு சமமாகவிருந்தது.

5

## திரண்ட நிலுவை


- **விரிந்த நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை மற்றும் நிதியியல் கணக்கிற்கான குறைவடைந்த உட்பாய்ச்சல்கள் என்பன 2020 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் சென்மதி நிலுவையின் திரண்ட மீதியின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தன.** திரண்ட நிலுவையானது பிரதானமாக படுகடன் மீள்கொடுப்பனவுகள் காரணமாக ஒதுக்கு நிலைமையில் வீழ்ச்சியினைப் பிரதிபலித்து 2019இன் இறுதியின் ஐ.அ.டொலர் 377 மில்லியன் கொண்ட மிகையொன்றுடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 1,104 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.

## செலாவணி வீத அசைவுகள்

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் இணைந்த நிச்சயமின்மைகளினால் தூண்டப்பட்ட ஊக அழுத்தத்தின் காரணமாக மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் அனுபவித்த சடுதியான தேய்விற்கு மாறாக இலங்கை ரூபா 2020இல் இதுவரையில் பரந்தளவில் நிலையானதாகவிருந்து வருகின்றது.** 2019 இறுதியில் பதிவாகியவாறான அதேமட்டத்தில் 2020 மாச்சு நடுப்பகுதி வரையிலும் காணப்பட்ட செலாவணி வீதமானது உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையினையின் திரவத்தன்மையினையும் சந்தை மனப்பாங்குகளையும் மோசமாகப் பாதித்த உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட முடக்குதலினை உடனடுத்து கடுமையாகத் தேய்வடைந்தது. 2020 மாச்சின் நடுப்பகுதியிலிருந்து 2020 ஏப்பிறல் நடுப்பகுதிவரை நிலவிய தேய்வடைதல் அழுத்தத்துடன் செலாவணி வீதமானது 2020 ஏப்பிறல் 9 அன்று ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 9.07 சதவீத தேய்வொன்றிப் பதிவுசெய்து ஐ.அ.டொலரொன்றுக்கு ரூ.199.75 என்ற உச்சத்தை எட்டியது. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மிதமிஞ்சிய தளம்பலினைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியின் முனைப்பான தலையீட்டினை இது அவசியப்படுத்தியிருந்தது. மத்திய வங்கி, 2020 மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் தேறிய அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 272.4 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையினை வழங்கியது. அதேவேளை குறுகியகால அடிப்படையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையினை வழங்குவதற்கு மத்திய வங்கி

வரைபடம் 5.10

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் செலாவணி வீதம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கென விற்பனை-கொள்வனவு வெளிநாட்டு செலாவணி பரஸ்பர பரிமாற்று ஒப்பந்த ஏற்பாடொன்றினை அறிமுகப்படுத்தியது. இக்காலப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக உலக நிதியியல் சந்தையில் தோன்றிய நிச்சயமின்மைகளின் காரணமாக வெளிநாட்டுத் திரவத்தன்மை மூலங்களுக்கான அணுகுவழி கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சில வெளிநாட்டு செலாவணி வெளிப்பாய்ச்சல்களை மட்டுப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட கொள்கை சார்ந்த வழிமுறைகள் காரணமாக 2020 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து இந்நிலைமையில் திருப்பமொன்று காணப்பட்டது. இவ்வழிமுறைகள், அப்பொழுதிலிருந்து செலாவணி வீதத்தினை வலுப்படுத்துவதற்குப் பங்களித்ததுடன் தேறிய அடிப்படையில் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்ப்பதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தது. 2020 செத்தெம்பர் இறுதியளவில் மத்திய வங்கியின் தேறிய கொள்வனவு ஐ.அ.டொலர் 255 மில்லியன் தொகையினைக் கொண்டதாகவிருந்தது. அதேவேளை ஆண்டின் ஆரம்பம் தொடக்கம் செத்தெம்பர் இறுதி வரை ரூபாவின் தேய்வடைதல் 2.1 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தபட்டிருந்தது. 2020 செத்தெம்பர் இறுதியில் குறுக்கு நாணய செலாவணி வீதத்தினைப் பிரதிபலித்து இலங்கை ரூபாவானது யூரோ (6.6 சதவீதம்), யாப்பானிய யென் (4.8 சதவீதம்), ஸ்ரேலிங் பவுன் (0.1 சதவீதம்) என்பவற்றுக்கெதிராக தேய்வடைந்ததுடன் இந்திய ரூபாவிற்கெதிராக (1.3 சதவீதம்) உயர்வடைந்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு தொடர்ச்சியான உட்பாய்ச்சல்களைப் பிரதிபலித்து 2020 ஒத்தோபர் முதல் மூன்று வாரங்களில் ரூபா மேலும் உயர்வடைந்ததுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் குறைநிரப்புச் செய்வதற்கு உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கி வெளிநாட்டு நாணயத்தினை ஈர்ப்பதற்கும் இயலச்செய்தது.

- **பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்களும் 5 - நாணய உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்ணும் 2020 செத்தெம்பர் இறுதிவரை ஆண்டு காலத்தில் வீழ்ச்சியடைந்தன.** குறுங்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளுடன் இணைந்து சில முக்கிய வர்த்தக பங்காளர்களின் நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாயின் பெயரளவு தேய்மானத்தினைப் பிரதிபலித்து

வரைபடம் 5.11
தாக்கமுள்ள செலாவணி வீதச்சுட்டெண்கள்
24 - நாணயம் (2017=100)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய, 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் 2020 செத்தெம்பர் இறுதியில் முறையே 2.69 சதவீதத்தினாலும் 1.09 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளன. அதேவேளை பெயரளவு செலாவணி வீதங்களின் மாறுபாடுகளுக்கு மேலதிகமாக ஏனைய நாடுகளுடன் பணவீக்க வேறுபாடுகளைக் கருத்திற்கொள்கின்ற உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் 5- நாணய கூடையில் 0.61 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் 24-நாணயக் கூடையில் 1.10 சதவீதத்தினால் அதிகரித்தன. 24-நாணய கூடையின் அதிகரிப்பிற்கு சில வர்த்தகப் பங்காளர்களுடன் ஒப்பிடுகையில் உயர்வான உள்நாட்டு விலை மட்டங்கள் முக்கிய காரணங்களாக அமையக்கூடியதாகவிருந்தது. ஆண்டின் தொடக்கத்துடன் ஒப்பிடுகையில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்களில் கலப்பான செயலாற்றத்திற்கு மத்தியில் 5- நாணய மற்றும் 24-நாணய உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்கள் 100 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அடிப்படை அளவு மட்டத்திற்கு கீழ் காணப்பட்டு செலாவணி வீதமானது நாட்டின் வர்த்தகப் போட்டித் தன்மைக்கு துணையளிப்பதாகக் காணப்பட்டது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. 2020இல் பிரதானமாக இலங்கைக்கும் அதன் முக்கிய வர்த்தக பங்காளர்களுக்குமிடையில் பணவீக்க வேறுபாட்டின் அதிகரிப்பின் காரணமாக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் என்பவற்றிக்கிடையில் விரிவடைகின்ற இடைவெளியொன்று அவதானிக்கப்பட்டது. இதற்கு

5

இலங்கையின் ஒப்பீட்டளவில் நிலையான பணவீக்க மட்டத்துடன் ஒப்பிடுகையில் ஏனைய முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் பணவீக்கத்தில் கணிசமான மிதமடைதல் முக்கிய காரணமாகவமைந்தது.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **வர்த்தகப்பற்றாக்குறையினால் பாரியளவில் உந்தப்படுகின்ற வெளிநாட்டுத்துறை தோற்றப்பாடானது கொவிட்-19 நோய்த்தொற்றின் உலகளாவிய பொருளாதாரத் தாக்கம் மற்றும் உள்நாட்டுக்கொள்கைப் பதிலிறுப்புகள் என்பவற்றின் மீது தங்கியிருக்கும்.** வர்த்தகப் பற்றாக்குறையானது ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவினத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட உயர்வான வீழ்ச்சியிலிருந்து நன்மையடைந்து 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளுக்கான உலகளாவிய கேள்வி மீதான குறிப்பிடத்தக்க தாக்கம் மற்றும் முடக்கல் காலப்பகுதியில் பலவீனமிக்க ஏற்றுமதிச் செயலாற்றம் என்பவற்றுடன் இறக்குமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவதற்கு சாத்தியம் காணப்படுகின்றது. அதேவேளை உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் துரிதமான வீழ்ச்சி, ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட இறக்குமதி கேள்வியின் வீழ்ச்சி மற்றும் கொள்கையினால் தூண்டப்பட்ட தனியாள் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளின் கட்டுப்பாடு என்பவற்றின் காரணமாக இறக்குமதிச் செலவினம் குறைவாகக் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்ட வசதி (ஜீஎஸ்பி) இந்தியாவிலிருந்து நீக்கப்பட்டமை இலங்கை ஏற்றுமதிகளுக்கு சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் அதேவேளை 2021 இலிருந்து முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஐக்கிய இராச்சியம் விலகிக்கொள்ளுதல் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு இடையூறு ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படவில்லை. ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையில் நிகழ்ந்து வருகின்ற வர்த்தகப் பிணக்கு, வர்த்தக திசைமாற்றங்கள் ஊடாக ஏற்றுமதிகளில் சில அதிகரிப்புகளைத் தோற்றுவிக்கலாம். இதன் விளைவாக 2019இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.5 சதவீதமாகவிருந்த வர்த்தகப் பற்றாக்குறை 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 6.6 சதவீதத்திற்கு மேம்படுமென எதிர்வுகூறப்படுகின்றது. நடுத்தர காலத்தில் உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதற்காக முன்னெடுக்கப்படும் தூண்டுதல்கள், புதிய வர்த்தக பங்காளர்களுடன் வர்த்தக உறவுகளைத் ஏற்படுத்திக்கொள்ளல், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தாபனத்தின் மூலம் சான்றுப்படுத்தப்பட்டவாறு வலுவான உயர்மட்ட நிறுவனம்சார் ஆதரவு என்பன மிகவும் போட்டிமிக்க செலாவணி வீதமொன்றுடன் இணைந்து ஏற்றுமதியில் வளர்ச்சி உத்வேகத்தைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரித்த உள்நாட்டு உற்பத்தியும் உயர்வான உள்நாட்டு பெறுமதி கூட்டலினதும் வாயிலாக எய்தப்படுகின்ற இறக்குமதி பதிலீடு ஊடாக இறக்குமதிச் செலவினத்தினைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையானது 2020 இல் கணிசமாக மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.** இந்த எதிர்பார்க்கப்பட்ட மேம்படானது சுற்றுலாத்துறையிலிருந்து குறைவான வருவாய்கள் மீதான பணிகள் கணக்கின் மிகையில் சுருக்கத்திற்கு மத்தியில் பெருமளவில் வர்த்தகப் பற்றாக்குறையில் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமான குறைவு மற்றும் முதனிலை வருமானக் கணக்கு பற்றாக்குறையில் வீழ்ச்சி என்பவற்றின் மூலம் பாரியளவில் தூண்டப்படும். தொழிலாளர் பணவனுப்பல்களும் ஆண்டின் எஞ்சிய பகுதியில் 2020 யூனிலிருந்து எதிர்கொண்ட வளர்ச்சி உத்வேகத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து சென்மதி நிலுவைக்கு துணையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், 2021இல் ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பினை இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பு விஞ்சிச்செல்வதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடையலாம். மேலும் 2021இல் சுற்றுலா வருவாய்கள் மீளத்தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட ஏற்றுமதிகளும் போக்குவரத்திலிருந்தான வருவாய்களும் பணிகள் கணக்கினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது எனினும், முதனிலை வருமானக் கணக்குப் பற்றாக்குறையானது பாதகமான உலகளாவிய சந்தை அபிவிருத்திகள் அதேபோன்று வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பின் மூலம் அதிகரித்த பங்குலாபக் கொடுப்பனவுகள் மற்றும் மீள்முதலிடப்பட்ட வருவாய்கள் என்பவற்றிலிருந்து விளைகின்ற உயர்வான வட்டிக்கொடுப்பனவுகள் மூலம் 2021இல் அதிகரிக்குமென எறிவுசெய்யப்படுகின்றது. முக்கிய மூல நாடுகளில் பொருளாதார நடவடிக்கை

5

படிப்படியாக இயல்பு நிலையை அடைதல் மற்றும் தொழிலுக்காக புலம்பெயர்வதில் எதிர்பார்க்கப்படும் படிப்படியான அதிகரிப்பு என்பன மூலம் தொழிலாளர் பணவனுப்பல்களில் மீட்சியானது 2021இல் தொடரக்கூடும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட நிதியியல் கெடுபிடிகள் காரணமாக 2020இன் பின்னடைவுக்கு மத்தியில் நிதியியல் கணக்கானது 2021இலும் அதற்கப்பாலும் வலுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு நேரடி முதலீடு உட்பாய்ச்சல்கள் குறிப்பாக கொழும்பு துறைமுகநகர் மற்றும் அம்பாந்தோட்டை கருத்திட்டங்களுக்கான உட்பாய்ச்சல்கள் தொடர்பில் 2021 தொடக்கம் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2021இலும் நடுத்தரகாலத்திலும் செலுத்தவேண்டியதாகவுள்ள உயர்வான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் வெளிநாட்டுத் துறையில் பாரிய கரிசனையொன்றாக விளங்கும். வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களை சீரமைப்பதற்கும் வரவுசெலவுப் பற்றாக்குறையின் பெருமளவான பாகத்திற்கு நிதியளிப்பதற்கு உள்நாட்டு மூலங்களைப் பயன்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் முயற்சிகள் வெளிநாட்டு நாணய படுகடன் இருப்பில் மேலும் அதிகரிப்பதனை மட்டுப்படுத்தக்கூடியதாகவிருக்கும். நாட்டின் வெளிநாட்டுப் படுகடனை நீடித்துநிலைத்திருக்கும் மட்டங்களில் பேணுவதற்கு அதிகரித்த வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மூலம் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையினை ஒப்பீட்டு ரீதியாக தாழ்ந்த மட்டத்தில் பேணுதற்கும் இதனூடாக வர்த்தகப் பற்றாக்குறையினைக் குறைப்பதறகும் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெறவேண்டிய அதேவேளை நடுத்தரகாலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வடிவில் படுகடனை தோற்றுவிக்காத உட்பாய்ச்சல்களை உயர்ந்தமட்டத்தில் கவருதல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும்.

5